# சாலை விதிகள் 3

(கிராமத்திலிருந்து வந்த முகிலன் தன் அத்தையுடன் கொழும்பு மாநகரின் காலி வீதி வழியாகச் சென்று கொண்டிருக்கிறான்.)

முகிலன் : அத்தை, எவ்வளவு அகலமான வீதிகள்! அப்பப்பா! எத்தனை வாகனங்கள்! இங்கே சாலையைக் கடப்பதே பெரும்பாடாக இருக்கும் போல் உள்ளதே!

அத்தை : ஆமாம் முகிலா, பார்த்து நட. இங்கே சாலைகளில் வாகனங்களை ஓட்டுவோரும் நடந்து செல்வோரும் சில விதிமுறைகளைக் கடைப் பிடிக்கின்றனர். அதனால் விபத்தைத் தவிர்க்க முடிகிறது. விதிமுறைகளை மீறும்போது விபத்து தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

(அவர்கள் செல்லவேண்டிய பேருந்து வந்து நிற்கிறது.)

முகிலன் : அத்தை, பேருந்தில் முன்பக்கம் இடம் இருக்கிறது. முன்னால் போய் ஏறிக் கொள்ளலாம். வாங்க...

அத்தை : முகிலா, அது தவறு! பேருந்தில் பின்பக்க வாயில் வழியாகத்தான் ஏற வேண்டும். பயணச் சீட்டைப் பெற்றுக்கொண்டு, பயணம் முடிந்தபின் இறங்க வேண்டிய இடத்தில் முன் வாயில் வழியாக இறங்க வேண்டும். அதுமட்டும் அல்ல! பேருந்து நிறுத்தத்தில் மட்டுமே இறங்க வேண்டும். மெதுவாகச் செல்கிறது என்றோ, சற்று நிற்கிறது என்றோ நாம் விரும்பும் இடத்தில் இறங்க முயல்வது தவறு. பேருந்தில் படியில் நின்றும், தொற்றிக் கொண்டும் பயணம் செய்ய முயல்வதும் தவறு. அவை விபத்துக்கு வழி வகுக்கும்.

முகிலன் : சரி அத்தை, நம் ஊரில் விரும்பிய இடங்களில் எல்லாம் பேருந்தை நிறுத்திப் பயணிகளை ஏற்றவும் இறக்கவும் செய்கின்றனர். நீங்கள் சொன்ன பிறகுதான் நகரப் பேருந்தில் பயணம் செய்யும்போது பின்பற்றவேண்டிய விதிமுறைகளை அறிந்தேன்.

(பேருந்து நிறுத்தம் ஒன்றில் நிற்கிறது.)

அத்தை : முகிலா, எழுந்திரு! நாம் இறங்க வேண்டும். பார்த்து இறங்கு. ஓடாதே! என் கையைப் பிடித்துக்கொள். இறங்கியவுடன், நிற்கும் பேருந்தின் முன்பக்கமோ, பின்பக்கமோ சென்று சாலையைக் கடக்கக்கூடாது. வாகனம் நிறுத்தப்படாத இடத்திற்குச் சென்று, சாலையின் இரு பக்கங்களையும் உற்று நோக்க வேண்டும். வாகனம் எதுவும் வராதபோது கடக்க வேண்டும். வா, இங்கே சாலையைக் கடப்பதற்கு உரிய இடத்திற்குச் செல்வோம். அதோ தெரிகிறது பார்..., சாலையில் குறுக்காக **மஞ்சட் கோடுகள்** போட்ட இடம், அங்குதான் சாலையைக் குறுக்கே கடக்க வேண்டும்.




முகிலன் : இப்படிக் கோடுகள் போடாத இடத்தில், சாலையின் ஒரு புறத்திலிருந்து இன்னொரு புறத்தை அடைய எப்படிக் கடப்பது?

அத்தை : சாலையில் வாகனங்களை ஓட்டுபவர், தமது இடப்புறம் ஒட்டிச் செல்ல வேண்டும் என்பது விதி. ஆகவே மற்ற இடங்களில் நாம் சாலையைக் குறுக்காகக் கடக்கும்போது, முதலில் வலப்புறம் திரும்பிப் பார்த்து விட்டு நடந்து, சாலையின் நடுப்பகுதியை அடைய வேண்டும். பின்னர் இடப்புறம் திரும்பிப் பார்த்த பின் வாகனப் போக்குவரத்தை உணர்ந்து, மேலும் நடந்து சாலையின் மறுபுறத்தை அடைய வேண்டும்.

முகிலன் : அத்தை, சாலையின் சந்திப்புகளில் மின் விளக்குகள் வண்ணம் மாறி மாறி எரிகின்றனவே? அது ஏன்?


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

அத்தை : வாகனப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த அவற்றை அமைத்துள்ளனர். சிவப்பு விளக்கு எரியும் போது வாகனங்கள் நிறுத்தற் கோட்டுக்குப் பின்னால் நிற்கவேண்டும். பச்சை விளக்கு எரியும் போது, உரிய திசையில் செல்லவேண்டும். வாகனங்களை நிறுத்தவும், பயணத்தைத் தொடங்க ஆயத்தமாகவும் முன் அறிவிப்பாக மஞ்சள் விளக்கு எரியும். அப்பகுதியில் சாலையைக் குறுக்காகக் கடக்க விரும்பும் மக்களுக்கு உதவும் பொருட்டுத் தனியே சிவப்பு மற்றும் பச்சை விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கும். வாகனமோ, மக்களோ பச்சை விளக்கு எரிந்தால் சாலையைக் கடக்க வேண்டும்; சிவப்பு விளக்கு எரிந்தால் நின்று விடவேண்டும்.

முகிலன் : சில இடங்களில் சுரங்கப் பாதைகள் உள்ளனவே, அவை ஏன் அத்தை?



அத்தை : போக்குவரத்து மிகுதியாக உள்ள சாலைகளில் அடிக்கடி வாகனங்களை நிறுத்த முடியாது. எனவே, போக்குவரத்துத் தடை இல்லாமல் நடைபெறவும் மக்கள் அச்சமின்றிச் சாலையைக் கடக்கவும் சுரங்க நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் நடை மேம்பாலங்களையும் அமைத்துள்ளார்கள். சாலைப் பயணிகள் சற்றுச் சிரமம் பாராமல் நடந்து சென்று சுரங்க நடைப்பாதையில் இறங்கியோ அல்லது நடைமேம்பாலத்தில் ஏறியோ

சாலையைக் கடப்பது பாதுகாப்பானது. இந்த நடைபாதைகள் இல்லாத இடங்களில் சாலையைக் கடப்பவர்களுக்கு போக்குவரத்துக் காவலர் உதவுவர்.

முகிலன் : சாலையில் நடப்போர் கடைப்பிடிக்க ஏதாவது விதிமுறை இருக்கிறதா?




அத்தை : நல்ல கேள்வி! நடந்து செல்வோர் எப்போதும் சாலையை ஒட்டி அமைந்த நடைபாதையையே பயன்படுத்த வேண்டும். அதுதான் பாதுகாப்பு. சில இடங்களில் கடைகள் அடைத்துக் கொண்டிருப்பதால் நடைபாதையில் நடப்பது மிகவும் சிரமம். இதை உரிய அதிகாரிகளுக்குத் தெரிவித்தால் சரி செய்வார்கள். நடந்து செல்வோர் தங்கள் வலப் பக்க நடைபாதையைப் பயன்படுத்துவதே பாதுகாப்பானது. எதிரில் வரும் வாகனங்களைக் கவனித்து நடக்க முடியும். இடப்புற நடைபாதையில் நடந்தால் பின்னால் வரும் வாகனங்களைக் கவனிக்க முடியாது. நடைபாதை இல்லாத சாலையில் நடந்து செல்வோருக்கும் இந்த முறை மிகமிகப் பாதுகாப்பாக அமையும்.

முகிலன் : அத்தை, வாகன விபத்துக்களைத் தவிர்க்க என்னென்ன முறைகளைக் கையாளுகிறார்கள்?

அத்தை : சில நடைமுறை விதிகளைக் கடைப்பிடித்தாலே பெருமளவிற்கு விபத்துக்களைத் தவிர்க்கலாம். சில சாலைகளில் வேகக் கட்டுப்பாடு வற்புறுத்தப்பட்டிருக்கும். அகலமான சாலைகள், வேகமான போக்குவரத்துக்காகச் சில பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். அப்பிரிவுகளில் உரிய வாகனங்கள் மட்டுமே செல்ல வேண்டும்.




இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

மெதுவாகச் செல்லும் வாகனங்களுக்குச் சாலையின் இடப்புறத்தை ஒதுக்கியிருப்பார்கள். சில இடங்களை ஒருவழிப்பாதையாக அறிவித்திருப்பார்கள். சில சாலைகளில் சரக்குப் பேருந்து குறித்த நேரங்களில் செல்லத் தடைவிதிக்கப்பட்டிருக்கும். வாகனங்கள் ஒன்றை மற்றொன்று முந்தும்போது, சாலையின் மத்தியில் போடப்பட்டுள்ள மஞ்சட் கோட்டைக் கடந்து செல்ல முயலக் கூடாது. இக்கோட்டை உயிர்காக்கும் கோடாகக் கொள்ள வேண்டும். இந்த விதிமுறைகளைப் பயணம் செய்வோர் தவறாமல் கடைபிடிக்க வேண்டும். அதனால் வாகன விபத்துக்களைத் தவிர்க்கலாம்.

முகிலன் : அத்தை, இது என்ன? 'வாகனம் நிறுத்தக்கூடாது' என எழுதப்பட்டுள்ளதே!

அத்தை : இது எச்சரிக்கைப் பலகை. போக்குவரத்து அதிகமாக உள்ள இடத்தில் வாகனங்கள் விரைவாகச் செல்ல வேண்டும் அல்லவா? வாகனங்களைச் சாலை ஓரத்தில் நிறுத்த அனுமதித்தால், போக்கு வரத்துத் தடை ஏற்படும். அதனால் சில இடங்களில் இது போன்ற எச்சரிக்கைப் பலகைகளை வைத்திருப்பார்கள். சில இடங்களில் மட்டும் வாகனங்களை நிறுத்த அனுமதிப்பார்கள். அதற்கு ஒரு மணி நேரத்திற்கு இவ்வளவு எனக் கட்டணம் செலுத்த வேண்டும். இவை போன்ற கட்டுப்பாடுகளாலேதான் போக்குவரத்து செம்மையாக நடைபெறுகிறது.



முகிலன் : அத்தை, இன்று உங்களோடு வந்ததால் சாலை விதிமுறைகளைத் தெளிவாகத் தெரிந்து கொண்டேன்.

அத்தை : முகிலா, இன்னும் சிலவற்றைத் தெரிந்துகொள். சிறுவர்கள் சாலைகளையும், தெருக்களையும், வீதிகளையும் விளையாட்டுத் திடல்களாகப் பயன்படுத்தக்கூடாது. காற்றாடி விடுதல் போன்றவற்றை மேற்கொள்ளக்கூடாது. விளையாட்டுகளின் மீதுள்ள ஆர்வத்திலும் கவனத்திலும் விபத்துக்கள் ஏற்படக் காரணமாகிவிடக் கூடாது. நம் வேலையும் முடிந்துவிட்டது. வா வீட்டுக்குப் புறப்படலாம்.

## அருஞ்சொற்கள்

| | | |
|---|---|---|
| பேருந்து | - | பயணிகள் போக்குவரத்திற்கு ஏற்றவகையில் வரிசையான இருக்கைகளுடன் கூடிய வாகனம் (பஸ்) |
| அத்தை | - | மாமி |
| விதிமுறை | - | நெறிகளைப் பின்பற்றவேண்டிய நியதி |
| பயணி | - | பயணம் மேற்கொள்பவர் |
| சுரங்கம் | - | உட்புறமாகத் தோண்டப்பட்ட குடைவு |
| அச்சமின்றி | - | பயமின்றி |
| சாலை | - | வாகனங்கள் செல்லவும் மக்கள் நடக்கவும் ஏற்றதாக அமைக்கப்படும் பாதை |
| திடல் | - | மைதானம் |

## கிரகித்தற் பயிற்சி

1. *மேலே கொடுக்கப்பட்ட உரையாடல் எங்கே நடைபெறுகிறது?*
2. *உரையாடல் யார், யாருக்கு இடையே நடைபெறுகிறது?*
3. *உரையாடலில் விபத்து ஏற்படக் காரணம் என்னவென்று கூறப்படுகிறது?*
4. *பேருந்திலிருந்து இறங்க முற்பட்ட முகிலனுக்கு அத்தை கூறுகின்ற அறிவுரைகளை எழுதுக.*
5. *சுரங்கப்பாதை ஏன் அமைக்கப்பட்டதாக அத்தை கூறுகிறார்?*
6. *நடந்து செல்வோர் கடைப்பிடிக்க வேண்டிய வீதி ஒழுங்கு யாது எனக் கூறப்பட்டுள்ளது?*
7. *சிறுவர்களின் எத்தகைய செயற்பாடுளால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன என அத்தை கூறுகின்றார்?*
8. *வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளவேண்டிய விடயங்களை விளக்கி எழுதுக.*

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

செயற்பாடு 1 : சாலை விதிகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை உமது நண்பருக்கு எடுத்துக்கூறுக.

செயற்பாடு 2 : பாடத்தில் “முகிலா அது தவறு!” என்று தொடங்கும் நான்காவது பந்தியை நிறுத்தற் குறியீடுகளை அனுசரித்து வாசித்துக் காட்டுக.

செயற்பாடு 3 : சோடியாகச் செயற்பட்டு பாடத்தில் உங்களைக் கவர்ந்த ஒரு பகுதியை முன்வந்து செய்து காட்டுக.

செயற்பாடு 4 : சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# மொழிவளம்

**பயிற்சி**

**1. பின்வரும் வாக்கியங்களில் இடம்பெறும் நிற அழுத்தம் தந்துள்ள சொற்களுக்குரிய எதிர்க் கருத்துச் சொற்களை எழுதுக.**

1. அம்மாவின் அன்பு போலியானது அல்ல.
2. செவ்வானம் மிகவும் அழகாக உள்ளது.
3. சாது மிரண்டால் காடு கொள்ளாது.
4. நிறை குடம் தளம்பாது.
5. இறைவன் அருள் நிறைந்தவன்.

**2. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச்சொற்களை அடைப்பினுள் உள்ள சொற்களிலிருந்து தெரிவு செய்க**

1. கொடை ( தருமம், இரப்பு, கேட்டல் )
2. சத்து ( அசத்து, சக்தி, விதை )
3. கேடு ( அழிவு, ஆக்கம், கெடுதி )
4. ஊடல் ( கூடல், நாடல், தேடல் )

# இலக்கணம்

## கூட்டு வாக்கியம்

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்

1 நிகாராவும் சரண்யாவும் பாடினர்.
2 கிளியும் குயிலும் எங்கள் வீட்டில் வளர்கின்றன.
3 நானும் தம்பியும் வந்தோம்.

இந்த உதாரணங்களில் இடம்பெறும் ஒவ்வொரு வாக்கியங்களிலும் இரு வாக்கியங்கள் இடம்பெறுவதனைக் காணலாம்.

நிகாரா பாடினாள்.
சரண்யா பாடினாள். } நிகாராவும் சரண்யாவும் பாடினர்.

கிளி எங்கள் வீட்டில் வளர்கிறது.
குயில் எங்கள் வீட்டில் வளர்கிறது. } கிளியும் குயிலும் எங்கள் வீட்டில் வளர்கின்றன.

இதனைப் போலவே

நான் வந்தேன்.
தம்பி வந்தான். } நானும் தம்பியும் வந்தோம்.

இவ்வாறாக இரண்டு அல்லது பல தொடர்களை இணைத்து ஒரு முற்று வாக்கியத்தை ஆக்குவதனையே கூட்டு வாக்கியம் என்போம்.

பாரதியும் பாரதிதாசனும் கவிஞர்கள்.
கத்தியாலும் மண்வெட்டியாலும் வெட்டினர்.

இந்த வாக்கியங்களில் உம் என்ற இடைச் சொல் இடம் பெற்று கூட்டு வாக்கியமாக அமைவதனைக் காணமுடிகிறது.

நான் பாடுவேன் ஆனால் ஆடமாட்டேன்.
குயில் முட்டையிடும் ஆனால் கூடு கட்டாது.

இந்த வாக்கியங்களில் ஆனால் என்ற இணைப்பிடைச் சொல் இடம்பெற்று கூட்டு வாக்கியத்தை ஆக்கியிருப்பதனைக் காணமுடிகிறது.

இவ்வாறு இன்னும் சில இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தி கூட்டு வாக்கியங்களை ஆக்கமுடியும். அவற்றை அடுத்த வகுப்பில் கற்பீர்கள்.

## பயிற்சி

1. **பின்வரும் வாக்கியங்களில் இடம்பெறும் தனிவாக்கியங்களையும் கூட்டு வாக்கியங்களையும் வேறுபடுத்துவோம்.**

   1 தயாளன் சித்திரம் தீட்டுவான்.
   2 நுவரெலியாவுக்குப் போனோம்.
   3 அதிபரும் ஆசிரியரும் பாராட்டினார்கள்.
   4 புத்தாக்குநர் ஆணைக்குழு உற்சாகப்படுத்தியது.
   5 ஈக்களும் நுளம்புகளும் பெருகி விட்டன.

2. உம் , ஆனால் ஆகிய இணைப்பிடைச்சொற்களைப் பயன்படுத்தி பின்வரும் தனிவாக்கியங்களைக் கூட்டுவாக்கியங்களாக மாற்றுவோம்.

   1. நான் பாடசாலைக்குப் போனேன். - தம்பி பாடசாலைக்குப் போனான்.
   2. வசந்தன் பாடுவான். - வசந்தன் ஆடமாட்டான்.
   3. கமலேஸ்வரி வெற்றி பெற்றாள். - மகிமா வெற்றி பெற்றாள்.
   4. பிரேம் புவியியல் படித்தான். - பிரேம் ஆங்கிலம் படிக்கவில்லை.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக